

# நிலப் போக்குவரத்து பெருந்திட்டம்




2030ன் நிலப் போக்குவரத்துப் பற்றிய ஒரு கண்ணோட்டம்

## நிலப் போக்குவரத்து வாரியம் 2008ம் ஆண்டுக்கான நிலப் போக்குவரத்துப் பெருந்திட்டத்தை (LTMP) வெளியிட்டு 2013ம் ஆண்டோடு ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்றன.

*தலையெடுக்கும் சவால்களைச் சமாளித்து, புதிய முனைப்புகளை வகுப்பதற்குப் பரிசீலனை செய்திட இதுவே தக்க தருணம். நமது நிலப் போக்குவரத்துப் பயணத்தின் அடுத்த 10-15 ஆண்டுகளில் முன்னோக்கிச் சென்றிட இது வழிவகுக்கும்.*

பயணிகளுக்கு உண்மையிலேயே என்ன வேண்டும் என்பதை நாங்கள் கேட்டறிவதை உறுதிப்படுத்திட, உங்களில் பலருடன் நாங்கள் பேசினோம். அந்த அளாவல்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன: எங்களது பெருந்திட்டம் உங்களை மனதில் கொண்டு வகுக்கப்பட்டது.

பங்களித்த அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றி. குறிப்பாக, யூஹுவா தனித்தொகுதியும் தேசிய தலைமைத்துவப் பயிற்சிக் கழகமும் செய்த உதவிக்கும், ஒன்பது கலந்துரையாடல் சுற்றுகளில் பங்கெடுத்த 100க்கும் மேற்பட்ட நிலப் போக்குவரத்து வாரிய நண்பர்களுக்கும் எங்களின் நன்றி.



**திரட்டப்பட்ட கருத்துகளிலிருந்து, பயணிகள் பெரிதும் மதித்த மூன்று பயண அம்சங்களை நாங்கள் அடையாளம் கண்டிருக்கிறோம்.**

### கூடுதல் இணைப்புகள்

நீங்கள் வேலை செய்யும், வாழும், பொழுதுபோக்கும் கூடுதல் இடங்களுக்கு உங்களை இணைப்போம்.

### மேம்பட்ட சேவை

நீங்கள் எந்தவகை போக்குவரத்தைப் பயன்படுத்தினாலும், நம்பகத்தன்மை, சௌகரியம், வசதி ஆகியவற்றை மேம்படுத்துவோம்.

### வாழத்தக்க, அனைவரையும் உள்ளடக்கும் சமூகம்

அனைவரையும் மனதில் கொண்டு நமது போக்குவரத்து செயல்முறையை நிர்மாணித்து இயக்குவோம்.



**சிங்கப்பூர் ஒரு சிறிய நாடு; நமது நிலப்பகுதியில் குடியிருப்புக்கு 14% ஒதுக்கப்பட்டிருக்க, சாலைகளுக்கு ஏற்கெனவே 12% அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.**







**எனவே, நாம் ஏன் இன்னும் அதிக சாலைகளைக் கட்டிக் கொண்டே இருக்கமுடியாது என்பது உங்களுக்கே புரியும்.**

பொதுப் போக்குவரத்தே சிறந்த வழி என்பதை ஏற்றுக்கொள்வது சிரமமல்ல. பொதுப் போக்குவரத்தில் செல்வது பசுமையான பயண முறையும் ஆகும். பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்வது நம்மில் பெரும்பாலோருக்கு ஏற்கெனவே வசதியாக இருந்தாலும், நிலைமையை இன்னும் மேம்படுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம்.



நமது நிலப் போக்குவரத்துப் பெருந்திட்டம் தீட்டியுள்ளபடி, இவைதான் நமது இலக்குகள் - **எதிர்வரும் 2030க்குள், நீங்கள் எதிர்பார்க்கலாம்**







- அனைத்துப் பொதுப் போக்குவரத்துப் பயணங்களில் (20 கிலோமீட்டருக்குக் குறைவு) 85 விழுக்காடு ஒரு மணி நேரத்திற்குள் முடிவடையும்.
- பத்தில் எட்டு வீடுகள் இரயில் நிலையத்திலிருந்து 10 நிமிடம் நடக்கும் தொலைவுக்குள் இருக்கும்.




- அனைத்து உச்சநேரப் பயணங்களில் 75 விழுக்காடு பொதுப் போக்குவரத்தில் செய்யப்படும்.

**இந்தக் கையேடு எங்களின் பற்பல திட்டப்பணிகளையும் நடப்பிலுள்ள திட்டங்களையும், இவ்விலக்குகளை நனவாக்கப்போகும் எதிர்வரும் திட்டங்களையும் எடுத்துரைக்கிறது. படித்துப் பாருங்கள்.**

# கூடுதல் இணைப்புகள்

## இரயிலில் பயணமா ?

நீங்கள் பல இடங்களுக்குச் செல்லவேண்டும், நாங்கள் இன்னும் பல இணைப்புகளை வழங்குகிறோம்.

நமது இரயில் கட்டமைப்பை 178 கிலோமீட்டரில் இருந்து அடுத்த 20 ஆண்டுகளுக்குள் சுமார் 360 கிலோமீட்டராக நாங்கள் இருமடங்காக்கப் போவதால், மேலும் வண்ணமயமான பெருவிரைவு இரயில் வரைபடங்களைக் காணத் தயாராகுங்கள். சிங்கப்பூரின் கரையோரத்தை இருமுறை சுற்றிவருமளவு நீளம் இது.

நமது இரயில் பாதையின் நீளம் இன்றுள்ள தோக்கியோ, ஹாங்காங் இரயில் பாதைகளைவிட நீளமாகவும், நமது இரயில் கட்டமைப்பின் நெருக்கம் இன்றைய லண்டனுக்கு நிகராகவும் இருக்கும்.




"சிங்கப்பூரின் குறுக்கே செல்லும் கிழக்கு-மேற்கு இரயில்தடம் (குறுக்குத்தீவு இரயில்தடத்தைக் குறிக்கிறது)... எனக்கு அருமையானதாக இருக்கும். ஏனென்றால் என் பயண நேரத்தைக் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கும்!"

**டான் டொங் செங்**
நிறுவன இயக்குநர்



**டௌன்டவுன், தாம்சன், கிழக்கு வட்டார இரயில்தடங்களுடன், இன்னும் பல தடங்கள் இருக்கின்றன:**

**குறுக்குத்தீவு இரயில்தடம் -**

சாங்கியிலிருந்து ஜூரோங் வரை செல்லும் இந்த இரயில்தடம் தீவின் கிழக்கிலிருந்து மேற்கு வரை நீளும். இது கிழக்கு-மேற்கு இரயில்தடத்திற்கு மாற்றாகச் செயல்படும்.

**ஜூரோங் வட்டார இரயில்தடம் -**

ஜூரோங் வட்டாரத்திலுள்ள ஜூரோங் வெஸ்ட், ஜூரோங் தொழிலியல் பேட்டை, தெங்காவிலுள்ள புதிய குடியிருப்பு மேம்பாடுகள் போன்ற முக்கிய பகுதிகளை இணைக்கும்.

தற்போதைய இரயில்தடங்கள் நீட்டிக்கப்படுமா, எடுத்துக்காட்டாக, வட்ட இரயில்தடம் எப்போதாவது முழு வட்டமாகுமா என நீங்கள் யோசித்திருந்தால், இனி தேவையில்லை.

**வட்ட இரயில்தடம்** முழு வட்டமாகும் - ஹார்பர்ஃபிரன்ட் நிலையத்தையும் மரினா பே நிலையத்தையும் சுமார் 2025 வாக்கில் இணைத்து, வட்டப்பாதை முழுமையாக்கப்படும்.

**வடக்கு-கிழக்கு இரயில்தடம்** பொங்கோல் நார்த் வரை நீட்டிக்கப்படுவதோடு, **டௌன்டவுன் இரயில்தடம்** கிழக்கு-மேற்கு இரயில்தடத்துடனும் கிழக்கு வட்டார இரயில்தடத்துடனும் இணையும்.

**அப்படியானால், 2013 முதல் 2021 வரை, கிட்டத்தட்ட ஒவ்வோர் ஆண்டும் பெருவிரைவு இரயிலின் ஒரு புதிய பகுதி செயல்படத் தொடங்குவதை நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.**




# பேருந்தில் செல்கிறீர்களா ?

பேருந்தில் செல்ல விருப்பமா ? உங்களுக்காகவும் சிலவற்றைச் செய்கிறோம்.

பேருந்து சேவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (BSEP), தற்போதைய பேருந்துகளோடு சுமார் 800 பேருந்துகளை (20 விழுக்காடு அதிகரிப்பு) நாங்கள் சேர்ப்பதோடு, சுமார் 40 புதிய பேருந்து சேவைகளையும் அறிமுகப்படுத்துகிறோம். இவ்வாறாக, நீங்கள் காத்திருக்கும் நேரம் குறைவதோடு, பேருந்திலும் அதிக இடம் இருக்கும்.



“ புதிய இரயில்தடங்கள் தயாராவதற்கு இன்னும் சில காலம் இருப்பதால், தற்போதைய பேருந்துகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குவதை நான் பாராட்டுகிறேன். மேம்பாடு துரிதமாக ஈடேற வேண்டுமானால், புதிய இரயில்தடங்கள் தயாராவதற்கு முன்பாகப் பேருந்துகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதே சரியான வழி. ”

**நடராஜா லோகநாதன்**
தலைமை ஆலோசகர்

**2014 இறுதிக்குள், பெரும்பாலான BSEP திட்ட மேம்பாடுகள் நிறைவடைந்துவிடும் என்பதால், நீங்கள் கூடுதல் இணைப்பை அனுபவிக்க முடியும்.**

உங்கள் பயண அனுபவத்தை மேலும் மேம்படுத்திட, உங்கள் வீட்டிலிருந்து ஆக அருகிலுள்ள பெருவிரைவு இரயில் நிலையத்திற்கு உங்களைக் கொண்டு செல்ல குறுந்தூரப் பேருந்து சேவைகளை நடத்துவதற்குத் தனியார் பேருந்து நிறுவனங்களுடன் நாங்கள் செயல்படுவோம். அதோடு, “சிட்டி டைரெக்ட்” எனும் பேருந்து சேவைமூலம் நகர்ப்பகுதியுடன் நீங்கள் நேரடியாக இணைக்கப்படுவீர்கள்.

“சிட்டி டைரெக்ட்” பேருந்து சேவையில் பயணிக்கும் நேரம், பேருந்தில்/இலகு இரயிலில் பெருவிரைவு இரயில் நிலையத்திற்குச் சென்று இரயிலில் மாறிச்செல்லும் நேரத்திற்கு நிகரானதாக இருக்கும்.

தொடக்கமாக, இத்தகைய 10 சேவைகள் அறிமுகமாகும். முதல் சேவை 2013 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியது.

## இப்போது



## நடந்து செல்கிறீர்களா ?

உங்களுக்கு அருகிலுள்ள பெருவிரைவு இரயில் நிலையத்திற்கு அல்லது பேருந்து நிலையத்திற்கு நடந்து செல்லும் எண்ணத்தை வெயிலும் திடீர் மழையும் மாற்ற வைக்கின்றனவா ?

இனிமேல் கவலை வேண்டாம்.

**உங்களுக்கு அருகிலுள்ள போக்குவரத்து மையத்திற்கு நீங்கள் நடந்துசெல்வதை சற்று எளிதாகவும் மேலும் இனிதாகவும் செய்வதற்காக இன்னும் பல கூரையுள்ள நடைபாதைகளை அமைக்கிறோம்.**

## 2018க்குள்: நீளமான கூரையுள்ள நடைபாதைகள்!



**எதிர்வரும் 2018க்குள், 200 கிலோமீட்டருக்கு மேற்பட்ட கூரையுள்ள நடைபாதைகள் கட்டப்படும். இது சிங்கப்பூரின் அகலத்தைவிட நான்கு மடங்கு நீளமாகும்!**

“போக்குவரத்து செயல்முறையின் ஒரு பகுதியாகக் கூரையுள்ள நடைபாதைகளைக் கருதினால், அது உண்மையிலேயே என் வீட்டு வாசலில் தொடங்கி, என் வேலையிடம் வரை செல்கிறது எனலாம்.”

**மலைய மாறன் S**
நிர்வாக ஆலோசகர்






# இரண்டு சக்கரங்களில் பயணமா?

சைக்கிளோட்டம் இதைவிட எளிதாக இருந்ததில்லை. உங்கள் மிதிவண்டியில் ஏறி, ஆக அருகிலுள்ள பெருவிரைவு இரயில் நிலையத்திற்கு ஓட்டிச் செல்லுங்கள்.

உங்கள் குடியிருப்பு நகரிலுள்ள சமூக நிலையங்கள், உணவு நிலையங்கள், நூலகங்கள், பள்ளிகள் போன்ற வசதிகளுக்கும், போக்குவரத்து மையங்களுக்கும் உங்களை இணைத்திட, இன்னும் பல வீடமைப்பு வளர்ச்சிக் கழகப் பேட்டைகளில் சுமார் 90 கிலோமீட்டர் நீளப் பாதைகளுடன் சைக்கிளோட்டப் பாதை கட்டமைப்பை நாங்கள் விரிவுபடுத்துவதால் இது சாத்தியமாகும். எதிர்வரும் 2020க்குள், மொத்த சைக்கிளோட்டப் பாதை கட்டமைப்பை 190 கிலோமீட்டருக்குக் கொண்டு வருவோம்.

**எதிர்வரும் 2030க்குள், 700 கிலோமீட்டருக்கு மேற்பட்ட நீளமுள்ள பரந்த சைக்கிளோட்டப் பாதை கட்டமைப்பை (PCN எனப்படும் பூங்கா இணைப்புக் கட்டமைப்புகள் இதில் உள்ளடங்கும்) தீவு முழுவதும் நீங்கள் எதிர்பார்க்கலாம். அப்படியானால், உங்கள் குடியிருப்பு நகரில் நீங்கள் சுற்றி வரலாம் அல்லது அக்கம்பக்க நகருக்குச் செல்லலாம் அல்லது சிங்கப்பூரின் வேறொரு பகுதியைக்கூட ஆராயலாம், அனைத்தும் உங்களது இரண்டு சக்கரத் துணையுடன்!**

பெருவிரைவு இரயில் நிலையத்தில் மிதிவண்டியை நிறுத்தி வைப்பது குறித்து இனியும் கவலைப்படத் தேவையில்லை. உங்களது நம்பிக்கையான இரண்டு சக்கரத் துணையைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு 2013 கடைசிக்குள் சுமார் 20 பெருவிரைவு இரயில் நிலையங்களில் மேலும் 2,400 மிதிவண்டி நிறுத்துமிடங்கள் சேர்க்கப்படும். எதிர்வரும் 2014ல், உங்கள் வசதிக்காக இன்னும் பல நிறுத்துமிடங்கள் சேர்க்கப்படும்.

அடுத்த சில ஆண்டுகளில்:




**2014 முதல் படிப்படியாக 100க்கும் மேற்பட்ட இரயில்கள் சேர்க்கப்படும்.**

> கடந்த 26 ஆண்டுகளாகத் தீவு முழுவதும் நாம் நம்பிக்கையுடன் பயணிக்க கிழக்கு-மேற்கு, வடக்கு-தெற்கு இரயில்தடங்கள் துணைப் புரிந்ததற்கு எங்களின் நன்றி. இரயில்தடங்களில் மேற்கொள்ளப்படும் முக்கிய மேம்பாடுகள் வரவேற்கப்படுகின்றன. வருங்காலத்தில் காத்திருக்கும் நேரம் குறையுமென ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

**கரோலினா டான்**
உதவி மேலாளர்

# மேம்பட்ட சேவைகள்

## உங்களுக்காகக் கூடுதல் இரயில்கள் வருகின்றன

கூடுதல் இரயில்கள் இருந்தால் காத்திருக்கும் நேரம் குறைந்து, நாம் செல்லுமிடத்திற்கு விரைவாகச் சென்றடையலாம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இதற்காகத்தான் கூடுதல் இரயில்களைச் சேவையில் சேர்க்கிறோம்.

வடக்கு-தெற்கு கிழக்கு-மேற்கு, வடக்கு-கிழக்கு மற்றும் வட்ட இரயில்தடங்களில் சேவையாற்றும் தற்போதைய இரயில்களின் எண்ணிக்கை முறையே 30%, 70% மற்றும் 60% அதிகரிக்கும்.

உச்ச நேரத்தின்போது:




## தற்போதைய பெருவிரைவு இரயில்தடங்கள் மேம்பாடு

புதிய இரயில்கள் சேர்க்கப்படும்போது உங்களது பயண அனுபவமும் மேம்படும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமன்றி, பழைய இரயில்தடங்களில் செல்லும் இரயில்கள் இன்னும் குறைவான இடைவெளியில் ஓடக்கூடிய வகையில் எங்களின் சமிக்ஞை செயல்முறையை நாங்கள் மேம்படுத்துகிறோம். இது தயாரானவுடன், உச்சநேர இரயில்கள் தற்போதைய 120 விநாடிகளுக்குப் பதிலாக, 100 விநாடி இடைவெளியில் ஓடும்.

எனவே, குறைவான காத்திருப்பு நேரம், விரைவான பயணங்கள் மற்றும் உங்களுக்கு மகிழ்ச்சிதரும் காரியங்களைச் செய்வதற்குக் கூடுதல் நேரம் ஆகியவற்றுக்குத் தயாராகுங்கள்.

**அதாவது, ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் தற்போதைய 5 இரயில்களுக்குப் பதிலாக 6 இரயில்கள் வரும்.**




# வாழத்தக்க, அனைவரையும் உள்ளடக்கும் சமூகம்

## மின்தூக்கி வசதி பெறுங்கள்

நீங்கள் வயதானவராக, நடமாடுவதில் சிரமம் உள்ளவராக அல்லது சிறு பிள்ளைகள் கொண்டவராக இருந்தால், படிக்கட்டுகள் சவாலாக இருக்கக்கூடும். எனவே, நீங்கள் இரயில் நிலையத்திற்கு அல்லது பேருந்து நிலையத்திற்குச் சற்று எளிதாகச் சென்றுவர, பின்வரும் இடங்களிலுள்ள மேம்பாலங்களில் 2018க்குள் மேலும் சுமார் 40 மின்தூக்கிகளை அமைக்கவிருக்கிறோம்:

- பெருவிரைவு இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள்/ ஒருங்கிணைந்த போக்குவரத்து மையங்கள் ஆகியவற்றிலிருந்து 200 மீட்டர் தூரம்
- பேருந்து மையங்கள், இலகு இரயில் நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து 100 மீட்டர் தூரம்
- பலதுறை மருந்தகங்கள், மருத்துவமனைகள், சமூகநல இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் சிறப்புத் தேவையுள்ள பிள்ளைகளுக்கான பள்ளிகள் ஆகியவற்றிலிருந்து 100 மீட்டர் தூரம்

“மேம்பாலங்களில் மின்தூக்கிகள் இருந்தால் நன்றாக இருக்குமே என நான் எப்போதும் நினைப்பதுண்டு. என்னைப் போன்ற இள வயதினருக்கு மின்படிக்கட்டுகள் போதுமானவை. வயதானவர்கள், சக்கர நாற்காலியில் இருப்பவர்கள், தள்ளுவண்டிகளில் குழந்தைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், அல்லது கனமான பைகளை வைத்திருப்பவர்கள் ஆகியோருக்கு மின்தூக்கிகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.”

**லியூ யீ சின்**
அரசாங்க ஊழியர்




## ஒலித் தடம்: இரயில் சத்தம் குறைப்பு

நிலத்திற்கு மேலுள்ள இரயில் பாதைகளுக்கு அருகாமையில் நீங்கள் குடியிருந்தால், இரயில்கள் ஓடும் சத்தம் உங்களுக்கு இரைச்சலாக இருக்கக்கூடும்.

நாங்கள் இதைச் சரிசெய்ய இருக்கிறோம்.

பெருவிரைவு இரயில் பாதைகளின் சில பகுதிகளில் சுமார் 20 கிலோமீட்டர் நீளத்திற்கு ஒலித்தடுப்பான்களை நாங்கள் ஏற்கெனவே பொருத்தி வருகிறோம். சீமெய், மார்சிலிங் வட்டாரங்களிலுள்ள பெருவிரைவு இரயில் பாதைகளுக்கு அருகில் நீங்கள் வாழ்ந்தால், கூடிய விரைவில் குறிப்பிடத்தக்க குறைவான அளவு சத்தத்தால் நீங்கள் பலனடைவீர்கள்.

# அதிகாரம் உங்கள் வசம்

## சாதுர்யமான பயணம் = கூடுதல் நெளிவுசுளிவுகள்

“இலவசப் பெருவிரைவு இரயில் பயணங்கள், உச்ச நேரமல்லாத மற்ற நேரங்களில் பயணம் செய்ய மக்களை ஊக்குவிக்க உதவும் என நினைக்கிறேன். இவ்வாறாக, இரயிலில் நம் அனைவருக்கும் கூடுதல் இடம் இருக்கும்! இலவசப் பயணங்களை அனுபவித்திடக் காலையில் முன்கூட்டியே பயணம் செய்வதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை.”

**பீட்டர் ஹொரால்ஸ்**
தங்ளின்-கோர்ன்ஹில்
தொகுதிக் குடியிருப்பாளர்

புதிய இரயில்தடங்கள், கூடுதல் இரயில்கள் மற்றும் பேருந்துகள் போன்ற பெரிய அளவிலான நடவடிக்கைகளை நாங்கள் அமல்படுத்துகையில், நீங்கள் சாதுர்யமான பயணியாகச் செயல்படுவதை எதுவும் தடுத்து நிறுத்தமுடியாது.

நீங்கள் உங்களது ஸ்மார்ட் கைத்தொலைபேசியில் அல்லது கணினியில் MyTransport.SG சேவையைப் பயன்படுத்தி, முன்கூட்டியே உங்கள் பயணத்தைத் திட்டமிடலாம். MyTransport.SG என்பது பேருந்து வருகையளிப்பு நேரம், கட்டணக் கணக்குப்பொறி, பெருவிரைவு இரயில் சேவையின் வரைபடம் போன்ற போக்குவரத்துத் தகவல்களை வழங்கும் இணையத்தளமாகும். அல்லது, காலை உச்ச நேரத்திற்கு முன்பாகப் பெருவிரைவு இரயிலில் இலவசப் பயணம் போன்ற திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பயன்களைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!




## மேம்பட்ட பயணத்திற்குச் சரியானதைச் செய்திடுங்கள்

அதிக தேவையுள்ள ஒருவருக்கு உங்கள் இருக்கையை விட்டுக்கொடுத்தல், வரிசையில் நிற்றல், உள்ளே நகர்ந்து மற்றவர்களுக்கு வழிவிடுதல் போன்ற பரிவுமிக்க எளிய செயல்கள், சக பயணிகளுக்கு மகிழ்ச்சியளிக்க உதவும்.

எனவே, ஏன் ஒருவரின் நாளை ஒளிமயமாக்கி, பயணத்தை மகிழ்ச்சிகரமாக்கக் கூடாது?

“ஒதுங்கி நின்று, மற்றவர்கள் வெளியேற வழிவிடுங்கள். இரயிலில் ஏறியதும், உள்ளே நகர்ந்து சென்றிடுங்கள்! அப்போதுதான் அனைவரும் தக்க சமயத்தில் பயணிக்க முடியும். அக்கறை காட்டுவதே, சரியான செயலாகும்!”

**கடாரியா, 11**
சவுத் வியூ
தொடக்கப்பள்ளி மாணவர்

# நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்

## சுருக்கமாக, இப்போது முதல் 2030 வரை நீங்கள் எதிர்பார்க்கக்கூடியவை இவை:













- உங்களை இன்னும் அதிக இடங்களுக்கு, குறைந்த நேரத்தில் கொண்டுசெல்ல இன்னும் பல பெருவிரைவு இரயில் தடங்கள், இரயில்கள் மற்றும் பேருந்துகள்.






- பெருவிரைவு இரயில் நிலையத்திற்கு அல்லது பேருந்து நிலையத்திற்கு நீங்கள் நடந்துசெல்லும் பயணம் இனிமையாக அமைய, மேலும் விரிவான கூரையுள்ள நடைபாதை கட்டமைப்பு.




- நடமாடச் சிரமப்படுவோருக்கும் முதியோருக்கும் உதவிட மேம்பாலங்களில் கூடுதல் மின்தூக்கிகள்.




- மேலும் விரிவான சைக்கிளோட்டப் பாதை கட்டமைப்பு மிதிவண்டியில் பயணிப்பது மேலும் எளிதாகப்போகிறது.




- பெருவிரைவு இரயில் பாதையின் இரைச்சலான பகுதிகளுக்கு அருகில் குடியிருப்போருக்குச் சத்தம் குறையும்.

எதிர்வரும் இந்த மேம்பாடுகள் குறித்து நாங்கள் உற்சாகத்துடன் இருக்கிறோம், நீங்களும் உற்சாகத்துடன் இருப்பீர்கள் என நம்புகிறோம்!

Land Transport Authority
We Keep Your World Moving
www.lta.gov.sg
1800-CALL LTA (1800 2255 582)
www.facebook.com/WeKeepYourWorldMoving
www.twitter.com/LTAsg